| UG–164 | BTM–21 |
| --- | --- |

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Second Year

## Tamil

### இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1. 'மூவர் முதலிகள்' – யாரைக் குறிக்கிறது?

2. திருநாவுக்கரசரின் இயற்பெயர் சுட்டுக.

3. பெரியபுராணம் எச்சொல்லால் தொடங்குகிறது?

4. மாணிக்கவாசகர் எம்மன்னனிடம் அமைச்சராகப் பணியாற்றினார்?

5. 'நாளங்காடி' என்றால் என்ன?

6. இந்திரன் மகன் சயந்தனாகக் கருதப்பட்டது எது?

7. வாலியை இராமன் எங்ஙனம் கொன்றான்?

8. ‘குரங்கினத் தலைவன்’ – யார்?

9. தேம்பாவணி எத்தனை காண்டங்களைக் கொண்டது?

10. தாவீது மன்னன் ஆட்சிபுரிந்த நகரம் எது?

11. ‘தாண்டகவேந்தர்’ யார்?

12. குணங்குடி, எவ்விடத்தில் கதவுதிறக்கப் பாடினார்?

13. மாதவி எத்தனை வகையான ஆட்டங்களை ஆடினாள்?

14. வாலியின் மகன் யார்?

15. சூசையின் தாயின் பெயரைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. ‘என் உள்ளம் கவர் கள்வன்’ – கள்வன் யார்? இடம்பெற்ற நூல் எது?

17. ‘வையம் அளந்தான்’ – யார்? எந்த அவதாரத்தைக் குறிக்கிறது?

18. திருமணத்தின் போது கண்ணகி, கோவலன் இருவரது வயதைச் சுட்டுக.

19. ‘ஐயா! நீ எனபது ஆவி என்றதும் பொய்யோ’ – யார், யாரிடத்துக் கூறியது?

20. வீரமா முனிவர் இயற்றிய நூல்கள் எவை?

21. இறைவனை, சுந்தரர் 'பித்தா' என்றழைக்கக் காரணம் யாது?

22. 'தாலாட்டு' – பொருள் தருக.

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

23. பிரமபுரத்தின் பெருமைகளைச் சம்பந்தர் பாடல்கள் வழி விளக்குக.

24. குணங்குடி மஸ்தான் சாகிபு இறைவனிடம் வேண்டுவன யாவை?

25. புகாரில் இருந்த ஐவகை மன்றங்கள் குறித்து எழுதுக.

26. அனுமனின் பெருமைகளாக வாலி கூறியன யாவை?

27. 'வீரமா முனிவர்' – குறிப்பு வரைக.

28. தேவாரப் பாடல்களில் இறைவன் எவ்வெவ்வுறவுகளாகக் கருதப்படுகிறான்?

29. பிற கடவுளர் கண்ணனுக்கு எவ்வெவற்றை வழங்கியதாகப் பெரியாழ்வார் கூறுகிறார்?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

30. திருநாவுக்கரசர் இறைவனைப் போற்றும் முறையை உரைக்க.

31. முத்தநாதனின் கபடமும் நாயனாரின் மனிதநேயத்தையும் ஆய்ந்துரைக்க.

32. 'அந்திமாலைசிறப்புச் செய் காதை' – கூறும் செய்திகள் யாவை?

33. வாலி, சுக்ரீவனுக்குக் கூறியன யாவை?

34. தாவீது – கோலியாத்து போரிட்டமையை விளக்கியுரைக்க.

———————

| UG–165 | BTM–22 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Second Year

இலக்கணம் – 2 (நம்பியகப் பொருள் புறப்பொருள் வெண்பாமாலை)

Time : 3 hours　　　Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. நம்பியகப் பொருளின் ஆசிரியர் யார்?

2. 'பெருந்திணை' என்பது யாது?

3. களவுப் புணர்ச்சியின் வகைகளைச் சுட்டுக.

4. தலைவன் தன் மனக்குறையாகிய தலைவியின் காதலை நிறைவேற்றக்கோரித் தோழியைப் புகழ்ந்து கூறுவது ———————— ஆகும்.

5. பகற்குறியின் வகைகள் யாவை?

6. வருந்துதல், வற்புறுத்துதல், தலைவிக்கு நேர்ந்த காவலை உணர்த்துதல் —————— ஆகும்.

7. கிளவித் தொகையின் பிரிவு யாது?

8. திருமணத்தை விரைந்து நடத்துவதற்குரிய முயற்சியின் மிகுதியைக் கூறுவது —————— ஆகும்.

9. தலைவி தான் கொண்ட களவொழுக்கத்தை முறையாக வெளிப்படுத்துவது —————— ஆகும்..

10. 'துடி நிலை' என்பது யாது?

11. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் யார்?

12. கரந்தைத் திணையின் துறைகள் எத்தனை?

13. "ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்

    காப்போர் சூடிய பூப்புகழ்ந்தன்று" எப்படலத்தை குறிக்கிறது?

14. 'ஒள்வாள் அமலை' என்பது யாது?

15. மறக்குடி மகளிரின் மறப்பண்பு கூறுவது எத்துறை?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. ஐந்திணைக்கு உரிய இலக்கணம் யாது?

17. கருப்பொருளின் வகைகளைச் சுட்டுக.

18. ‘மடற் கூற்று’ குறித்து எழுதுக.

19. ‘குறை நயப்பித்தல்’ என்றால் என்ன?

20. புறத் திணைகள் எத்தனை?

21. ‘விறலியாற்றுப்படை’ பொருள் தருக.

22. ‘பாடாண்திணை’ – பொருள் தருக.

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. பெரும் பொழுதின் வகைகளைச் சுட்டுக.

24. நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்களை எழுதுக.

25. இரவுக் குறியின் வகைகள் யாவை?

26. ‘வரைதல் வேட்கை’ – குறித்து எழுதுக.

27. தொட்ட காஞ்சி, தொடாக் காஞ்சி – விளக்குக.

28. பெருஞ்சோற்று நிலை, குடைநிலை – விளக்குக.

29. முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை – விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஐந்திணைக்குரிய கருப்பொருள்களைப் பட்டியலிடுக.

31. நம்பியகப் பொருள் கூறும் பிரிவுகள் குறித்து விளக்குக.

32. உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் குறித்து விளக்குக.

33. வெட்சிப் படலத்தில் கூறப்படும் செய்திகளை விரிவாக எழுதுக.

34. வாகைப் படலத்தால் அறியப்படும் பண்டைக்காலச் சமுதாய நிலையை நிறுவுக.

———————

| UG–166 | BTMAL-21 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018

## Second Year

### இதழியல்

Time : 3 hours    Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. முதன்முதலில் இதழியலாளர்களை 'அரசின் நான்காம் தூண்' என்று வர்ணித்தவர் யார்?

2. 'பத்திரிகை தான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி' என்று கூறியவர் யார்?

3. 'நாளிதழ்கள்' என்ற சொல்லின் பொருள் யாது?

4. 'திராவிட நாடு' எந்த இதழ்வகையைச் சார்ந்தது?

5. 'ஜுனியர் விகடன்' எத்துறை சார்ந்து வெளியிடப்படுகிறது?

6. 1780-ல் இந்தியாவில் வெளிவந்த முதல் செய்தித்தாளின் பெயர் என்ன?

7. இதழியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

8. கிழக்கிந்திய நிறுவனத்தின் 'முதல் முன்னாள் அச்சகர்' என்று இதழில் அறிமுகப்படுத்திக் கொண்டவர்?

9. பிரஸ் என்பதன் தமிழ்ச் சொல் என்ன?

10. தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?

11. செய்திகள் எத்தனை வகைகளாக உள்ளன?

12. திரு.ஏ.என். சிவராமன் நடத்தும் பத்திரிகையின் பெயர் என்ன?

13. 1979-ஆம் ஆண்டில் இண்டியன் எக்ஸ்பிரஸின் செய்தியாளர் யார்?

14. 'க்ரைம் நியூஸ்' என்பதன் பொருள் யாது?

15. 1956-இல் 'மாலை முரசு' என்ற பத்திரிகையைத் தொடங்கியவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. இதழியலின் இலக்கணம் குறித்தெழுதுக.

17. இதழ்களின் பொதுப் பணிகள் யாவை?

18. இதழியல் விதிகள் யாவை?

19. பத்திரிகைச் சுதந்திரம் குறித்து எழுதுக.

20. இருவகை இதழியலாளர்கள் யார்?

21. செய்தியாளர் விளக்கம் தருக.

22. விளம்பரங்களின் நோக்கங்கள் இரண்டினைக் கூறுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. இதழ்களின் பொதுப் பணிகள் குறித்தெழுதுக.

24. இதழ்களின் பகுப்பு முறைகளைக் கூறுக.

25. செய்தியாளரின் கருவிகள் குறித்தெழுதுக.

26. உலகச் செய்தி நிறுவனங்கள் பற்றி எழுதுக.

27. கேலிச் சித்திரங்கள், கருத்துப் படங்களின் விளக்கம், தனித்திறமைகள் குறித்தெழுதுக.

28. திறனாய்வாளர் யார்? திறனாய்வாளர்களின் இயல்புகள் யாவை?

29. விளம்பரங்களின் வகைகள் குறித்து எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. இதழ்களின் சுதந்திரம் குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

31. பத்திரிகைச் சட்டங்கள் குறித்தெழுதுக.

32. செய்தி நிறுவனங்களின் வளர்ச்சியினை எடுத்துரைக்க.

33. செய்தி ஆசிரியர் யார்? துணையாசிரியரின் பணிகள் யாவை?

34. திறனாய்வு குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

| | |
|---|---|
| **UG–167** | **BLT–21** |

B.Lit. DEGREE EXAMINATION –
JUNE, 2018

Second Year

மொழித்திறன்

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. பேச்சுக் கலையின் பிறப்பிடம் எது?

2. வானொலிப் பேச்சாளர்கள் உரை நிகழ்த்தும் போது கவனம் செலுத்த வேண்டியது எது?

3. பி.ஸ்ரீ. ஆச்சாரியா எழுதிய இந்திய வரலாற்றுத்தொடர் கட்டுரை எது?

4. தலையங்கம் அமைப்பு முறைகள் எத்தனை?

5. கருத்துப்படம் என்றால் என்ன?

6. கடிதங்களின் வகைகள் எத்தனை?

7. ‘‘ஆவணம்’’ பொருள் தருக.

8. ஆங்கிலத்தில் பிரிசிஸ் (precis) என்பதன் பொருள் யாது?

9. மதிப்புரை செய்வதற்கு அனுப்பப் பெறும் நூல்கள் எத்தனை?

10. ‘இலக்கியத் திறனாய்வு’ பொருள் தருக.

11. கனவுத் தொழிற்சாலை என்பது எது?

12. ‘‘வாசகம்’’– பொருள் தருக.

13. ‘‘கட்டமைப்பு’’ விளக்கம் தருக.

14. விவாத நடை என்பது என்ன?

15. அரசியல் நடிகன் என்பவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. ‘‘மேடைப் பேச்சு’’ விளக்குக.

17. ‘‘பாயிரம்’’ குறிப்பு வரைக.

18. ‘‘மொழிநடை’’ – விளக்குக.

19. (செய்தி) News– பொருள் தருக.

20. ‘‘தலையங்கம்’’ குறிப்பு வரைக.

21. ஜீரோநேரம் என்பது என்ன?

22. நூல் மதிப்பீடு செய்பவரின் தகுதிகள் இரண்டினை எழுதுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. ரோமாபுரி நாட்டின் மேடைப் பேச்சாளர்கள் குறித்து எழுதுக.

24. ஆன்மீகப் பேச்சு என்றால் என்ன?

25. வாசகர், வாசகர் கடிதம் குறித்து விளக்குக.

26. நீதிமன்றச் செய்திகள் விளக்குக.

27. ஆவணம் எழுதும் முறையினை விவரி.

28. திறனாய்வாளனின் தகுதிகள் குறித்து எழுதுக.

29. ‘‘செய்தித்தலைப்புகள்’’ பற்றி ஒரு கட்டுரை வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. கட்டுரைகளின் வகைகள் குறித்து விவரி.

31. தலையங்கம் செய்தித்தாளில் பெறும் இடத்தினை விளக்குக.

32. இலக்கியக் கட்டுரைகள் என்பது யாது?

33. அண்மையில் வெளி வந்த ஏதேனும் ஒரு திரைப்படத்தைத் திறனாய்ந்து எழுதுக.

34. நூல் மதிப்புரையின் வகைகளை விளக்கி எழுதுக.

| UG–169 | BLT–22 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Second Year

வானொலி, தொலைக்காட்சிக் கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. தகவல் சமூக தினம் எந்த மாநாட்டின் நினைவாக கடைப்பிடிக்கப்படுகின்றது?

2. ஒளிப்படக் கருவியின் (camera) அடிப்படைத் தத்துவத்தை தந்தவர் யார்?

3. வாய்மொழி கதைகள் எவ்வகை ஊடக வடிவத்தின் கீழ் வருகிறது?

4. கூகுள் என்றால் என்ன?

5. நடைமுறைக்கு வந்த முதல் ஒளிப்படத்திற்கு என்ன பெயர் சூட்டப்பட்டது?

6. பத்திரிகை மற்றும் புத்தகப் பதிவுச் சட்டம் எந்த ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது?

7. சுவரொட்டிகளை தயாரிக்க எகிப்தியர்கள் எந்தப் பொருளைப் பயன்படுத்தினார்கள்?

8. ஒற்றைக் கலாச்சார முறைமைக்கு முக்கியக் காரணியாக விளங்குவது எது?

9. சைஃபர் சட்டங்கள் எந்தச் சட்டப்பிரிவின் கீழ் வருகிறது?

10. கையால் எழுதப்பட்ட தகவல்களை எதன் மூலம் பிறருக்கு அனுப்பலாம்?

11. அச்சிடுதல் மற்றும் எழுத்து வடிவத்தில் தகவல் பரிமாற்றம் எந்தக் கண்டுபிடிப்பிற்கு பிறகு சாத்தியமானது?

12. திறந்த நாட்குறிப்பு என அழைக்கப்படுவது எது?

13. எழுத்து என்னும் சொல் முதலில் எதனை குறித்தது?

14. மின்னஞ்சல் தாக்கத்தினால் எந்தத் துறையில் புரட்சி ஏற்பட்டுள்ளது?

15. தகவல்களைக் குறியீடுகளாக மாற்றும் செயலை எவ்வாறு கூறுவார்கள்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. மின்னஞ்சல் குறிப்பு வரைக.

17. வலைப்பதிவுகளின் பயன்பாட்டினை விளக்குக.

18. ஏதேனும் ஐந்து முக்கிய இணைய இதழ்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

19. கேமராவில் ஷட்டர் எதற்குப் பயன்படுகிறது?

20. 'தகவல்யுகம்' குறிப்பு வரைக.

21. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒளிப்பரப்பப்படுகின்றன?

22. மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களின் வகைகளை விளக்குக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. தொலைபேசி – அலைபேசி இவ்விரு தொழில்நுட்பங்களின் வேறுபாடுகளை விளக்குக.

24. தகவல் தொடர்பினால் எவ்வாறு கலாச்சாரப் பண்பாட்டு மாற்றம் ஏற்படுகிறது?

25. வலைப்பதிவில் தமிழில் எழுதுதல் குறித்து விளக்குக.

26. ஒளிப்படக்கருவியின் வகைகளைக் குறித்து எழுதுக.

27. ஊடகங்களின் போலி செய்திப் பரப்புரையால் ஏற்படும் தீங்கினைப் பற்றி எழுதுக.

28. பத்திரிகை மற்றும் புத்தகப் பதிவுச் சட்டம் முன்வைக்கும் சட்ட வரைவுகள் என்ன?

29. தகவல் பரிமாற்றத்தில் மரபு வழி ஊடகங்களின் பங்கு என்ன?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. நவீன உலகில் இணைய இதழ்களின் பயன்பாட்டை விளக்கி எழுதுக.

31. வெகுசன ஊடகத்தின் வகைகள் குறித்து விரிவாக எழுதுக.

32. ஆதிமனிதர் எவ்வாறெல்லாம் தகவல் பரிமாற்றம் செய்தார்கள் என்பதை விரிவாக எழுதுக.

33. வலை வானொலி ஒலிபரப்பு முறையின் படிநிலைகளை விளக்குக.

34. நேரடித் தகவல் தொடர்பு பற்றி விளக்கி வரைக.

———————